# அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபன
# வெற்றிடம் – 2026

வர்த்தக அச்சிடல், பாதுகாப்பான அச்சிடல், வெளியீடுகள் மற்றும் காகிதாதிகள் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள இலாபகரமான வர்த்தக அமைப்பான அரச அச்சகக் கூட்டுத்தாபனம் உதவி முகாமையாளர் (நிர்வாகம் மற்றும் மனிதவள அபிவிருத்தி) பதவிக்காக நிலவும் வெற்றிடத்திற்கு சிறந்த சாதனைப் பதிவுகளைக் கொண்ட ஆற்றல் மிக்க மற்றும் செயற்திறனுள்ள இலங்கையரைத் தேடுகின்றது.

**01. உதவி முகாமையாளர் (நிர்வாகம் மற்றும் மனிதவள அபிவிருத்தி) பதவி (MM 1-1) (01 பதவி)**

**பணி விபரம்:**

நிறுவனத்தின் நிர்வாகம் மற்றும் மனிதவள முகாமைத்துவத்தில் ஒத்துழைப்பாக பங்காற்றுவதுடன், மிகுந்த ஊக்கமுள்ள, அறிவுள்ள மற்றும் திறமையான பணியாளர்களை உறுதிசெய்யும் வகையில், முறையான நிர்வாக மற்றும் மனிதவளக் கொள்கை மற்றும் திட்டத்தை வகுத்துச் செயற்படுத்தும் பொறுப்பை நிறைவேற்றுவதில் முகாமையாளர் (நிர்வாகம் மற்றும் மனிதவள அபிவிருத்தி) அவர்களுக்கு உதவுதல்.

**தகைமைகள்**

**கல்வி: (வெளிவாரி)**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் ஒரு இளமாணிப் பட்டம் அத்துடன் தொடர்புடைய துறையில் அரசாங்கத் திணைக்களம் / கூட்டுத்தாபனம் / சபை அல்லது கீர்த்தி வாய்ந்த வர்த்தக நிறுவனமொன்றில் தகைமைக்குப் பின்னரான மூன்று (03) வருடகால அனுபவம்

**(உள்வாரி)**

(அ) தொடர்புடைய துறையில் கனிஷ்ட முகாமைத்துவ வகுதியில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடகால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் இந்தப் பதிவிக்கு தகுதியுடையோராவர்.

(ஆ) மேலுள்ளவற்றுக்கு மேலதிகமாக JM வகுதியில் மற்றும் வெளிவாரி விண்ணப்பதாரிகளின் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்களும் இந்தப் பதவிக்கு தகுதியுடையோராவர்.

**ஆட்சேர்ப்பு முறை: கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு**

**வயதெல்லை:**

22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சம்பள அளவு**

2027-01-01ஆம் திகதி முதல் அமுலாகும்.
MM 1-1- 2025 ரூபா 91,690/- 10x2,480 - 15 x 3,450 – 168,240/- (மாதாந்தம்)
2026-03-25ஆம் திகதிய 01/2025ஆம் இலக்க முகாமைத்துவ சேவை திணைக்கள சுற்றுநிருபத்தின் பிரகாரம்

| உதவி முகாமையாளர் (நிர்வாகம் மற்றும் மனிதவள அபிவிருத்தி) **MM 1-1** | |
|---|---|
| 2026-01-01 | 2027-01-01 |
| ரூபா 81,710 | ரூபா 91,690 |

**சேவை நிபந்தனைகள்:**

மேற்கூறிய பதவி நிரந்தரமானது மற்றும் 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது. முன்னைய பதவியில் ஏற்கனவே உறுதி செய்யப்பட்ட உள்வாரியாக தெரிவு செய்யப்படும் ஊழியர்கள் ஒரு (01) வருட பதில் காலத்திற்கு உட்படுத்தப்படுவர்.

**ஏனைய கொடுப்பனவுகள்:**

சம்பளத்திற்கு மேலதிகமாக பின்வரும் கொடுப்பனவுகள் பதவிக்கு ஏற்புடையதாகும்.

- சுற்றுநிருபத்தின் பிரகாரம் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்
- வருகை ஊக்குவிப்பு
- உணவுக் கொடுப்பனவு

**ஏனைய அனுகூலமான நன்மைகள்:**

- ஊழியர் மற்றும் அவரின் குடும்ப உறுப்பினர்கள் உள்ளாகும் வகையில் மருத்துவ திட்டம்
- KPI அடிப்படையில் ஊக்குவிப்பு முறைமை
- ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்
- பயன்படுத்தாத விடுமுறையை பணமாக்குதல்.

**எவ்வாறு விண்ணப்பிப்பது:**

- 2026-06-19ஆம் திகதியில் தொடர்பான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் கல்வித் தகுதிகள், தொழில்முறைத் தகுதிகள், வேலை அனுபவம் மற்றும் பிறப்புச் சான்றிதழ் ஆகியவற்றின் சான்றளிக்கப்பட்ட நகல்களுடன் தங்களது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். மேற்கூறியவற்றுடன் பொருந்தாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். ஏற்கனவே அரசு / பொது நிறுவனம் / கூட்டுத்தாபனங்கள் / சபைகளில் பணிபுரிபவர்கள், தத்தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் தங்களது விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.
- விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட வேண்டும்.
- சகல விண்ணப்பங்களையும் 2026-06-19ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், அரச அச்சகக் கூட்டுத்தாபனம், பனாலுவ, பாதுக்க எனும் முகவரிக்கு ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும் அல்லது நேரடியாகக் கையளிக்க வேண்டும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருந்தால், ஆட்சேர்ப்பு தொடர்பான தகுதிவாய்ந்த அதிகாரி அது குறித்து தீர்மானிப்பார். எந்த வகையிலும் ஆதரவைத் தேடுதல் தகுதியிழப்பாகக் கருதப்படும்.

**தலைவர்,**
**அரச அச்சகக் கூட்டுத்தாபனம்,**
**பனாலுவ,**
**பாதுக்க.**

SDC